**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 50/2024**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய சாந்தி **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சாந்தி | | |
| Father /Husband Name | : | சம்பந்தம் | Court | : |
| Village | : | பொறையார் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 61/2025 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான்.

06.02.2001 அன்று பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.05.2024 தேதியிட்ட வாதிக்கும் பிரதிவாதிக்கும் இளங்கோவன் என்பவர் பவர் ஏஜென்ட் என்ற முறையில் கொடுத்த அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.